Vetrii IAS Study Circle®
The Best Academy for IAS & TNPSC Exams
An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011
CHENNAI • SALEM • KOVAI • MADURAI • TIRUNELVELI • THANJAVUR • KOVILPATTI
• TIRUCHENGODE • TRICHY • TIRUVANNAMALAI • KRISHNAGIRI • DHARMAPURI • TIRUPPUR
Since 2011
Visit us on www.vetriias.com



M. SHUNMUGAM B.E.,
Founder & Chairman

**TNPSC GROUP - II & IIA Prelims - Answer Explanation**

**பொதுத் தமிழ் : முழுத்தேர்வு 1**

**55-43/30-21/50-24/25-12/44-18/40-18**

1. **விடை: D**

**விளக்கம்:**

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (13 ஏப்ரல் 1930 - 8 அக்டோபர் 1959) ஒரு சிறந்த தமிழ் அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர் ஆவார்.
- எளிமையான தமிழில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியது இவருடைய சிறப்பாகும்.
- இவருடைய பாடல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

2. **விடை: A**

**விளக்கம்:**

- நிகண்டு நூல்களுள் மிகச் சிறந்தது - சூடாமணி நிகண்டு
- சூடாமணி நிகண்டு நூலின் ஆசிரியர் - மண்டல புருடர்
- தமிழில் தோன்றிய முதல் நிகண்டு நூல் - சேந்தன் திவாகரம்
- சேந்தன் திவாகரம் நூலின் ஆசிரியர் - திவாகரர்

3. **விடை: C**

4. **விடை: C**

5. **விடை: B**

**விளக்கம்:**

- வேதாரணியம் (சமஸ்கிருதம்) - திருமரைக்காடு
- வேதனை (சமஸ்கிருதம்) - துன்பம்
- வேகம் (சமஸ்கிருதம்) - விரைவு
- வாரிதி (சமஸ்கிருதம்) - கடல்

6. **விடை: D**

**விளக்கம்:**

- கண்ணார் - பகைவர்.
- கன்னார் - கல்நார், ஏனம்வேலைசெய்பவர்.
- அணிலம் - அணிற்பிள்ளை.
- அனிலம் - காற்று, அச்சம், பிறக்கை.

7. **விடை: A**

**விளக்கம்:**

- ஒள்ளியவர் - அறிவுடையவர், ஒள்ளியவர் × அறிவிலார்
- அகசு - பொழுது; பகல்; இராப்பகல் கொண்ட நாள். அகசு × இரவு
- முறையர் - உறவினர், முறையர் × அயலவர்
- இடும்பை - துன்பம், இடும்பை × இன்பம்

8. **விடை: A**

**விளக்கம்:**

- அந்தோ! இயற்கை அழிகிறதே!
- தமிழின் இனிமைதான் என்னே!

9. **விடை: D**

**விளக்கம்:**

- வெள - வெளவுதல், கௌவுதல், பற்றுதல்
- வை - கூர்மை, புல், வைக்கோல்
- வே - வேவு, ஒற்று
- வ - நான்கில் ஒரு பங்கு

10. **விடை: B**

**விளக்கம்:**

"கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் போல" என்பது காலம் கடந்த பின் செய்யும் பயனற்ற முயற்சியைக் குறிக்கும். அதற்கு இணையான பழமொழி "ஆடி காற்றில் அம்மி பறந்தபின் அரிசி பொறுக்குதல்" ஆகும்.

11. **விடை: A**

12. **விடை: D**

**விளக்கம்:**

- அக்கப்போர் (உருது) - வம்புப்பேச்சு, வீண்பேச்சு
- அக்கிரசம்பாவனை (சமஸ்கிருதம்) - முதல் மரியாதை
- அக்கிரசன் (சமஸ்கிருதம்) - அண்ணன்
- அக்கினிக்கணம் (சமஸ்கிருதம்) - தீப்பொறி
- அக்கினிக்கப்பரை (சமஸ்கிருதம்) - தீச்சட்டி

13. **விடை: D**

**விளக்கம்:**

திருக்குறளில், ‘உடைமை’ என்று முடியும் பத்து அதிகாரங்கள் உள்ளன. அவை: அடக்கமுடைமை, அன்புடைமை, அருளுடைமை, அறிவுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, பண்புடைமை மற்றும் நாணுடைமை.

14. **விடை: A**

15. **விடை: D**

16. **விடை: D**

**விளக்கம்:**

- மகிழம் - மகிழமரம்
- மகிளம் - பூவிதழ்
- மகிலம் - மயிலம்
- மங்குலம் - மழுக்கம்,கலக்கம்,முகவாட்டம்.
- மங்குளம் - பார்வைமந்தம்,ஐயம்,நிறக்குறைவு

17. **விடை: C**

**விளக்கம்:**

- ஒல்கார் – விலகமாட்டார், ஒல்கார்× விலகுவார்
- உரவோர் – மனவலிமையுடையோர், உரவோர்× மனவலிமையற்றோர்
- ஏதம் – குற்றம், ஏதம் × குற்றமற்றவர்

18. **விடை: A**

**விளக்கம்:**

- எட்டு + ஆயிரம் - எண்ணாயிரம்
- பத்து + தொடி - பதின்றொடி

19. **விடை: C**

**விளக்கம்:**

- ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும். (எ.கா): பூக்கூடை
- ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் இரண்டாம் வேற்றுமை விரி) தொடர்களில் வல்லினம் மிகும்.

  (எ.கா): பாலை+குடி - பாலைக்குடி

  - இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

  (எ.கா): சாரைப்பாம்பு
- உவமை தொகையில் வல்லினம் மிகும்.

  (எ.கா): தாய்த்தமிழ்

20. **விடை: B**

**விளக்கம்:**

- இறவு - மிகுதி, முடிவு, நீக்கம்
- கரை - எல்லை, தடுப்பு, ஓரம்

21. **விடை : C**

**விளக்கம்:**

- பக்கம், அடி - புடை
- கிரீடம், முடிவு - முடி
- வாசனை, விரைந்து செய் - விரை

22. **விடை: B**

23. **விடை: D**

**விளக்கம்:**

- Enterotoxin - குடல்நச்சு
- Enteralgia - குடல்வலி
- Enterocoel - குடல்சார் உடற்குழி
- Epiglottis - குரல்வளை மூடி

24. **விடை: B**

**விளக்கம்:**

- Renaissance - மறுமலர்ச்சி
- Revivalism - மீட்டுருவாக்கம்

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

25. **விடை: C**

**விளக்கம்:**

- இரண்டில் ஒன்றை அல்லது பலவற்றில் ஒன்றைத்தேர்வு செய்யக்கூடிய இங்களில் சாய் கோடு இடப்படுகிறது.
- முகன்மையான ஒன்றைக் கவனத்தை ஈர்க்குமாறு தருவதற்கு அடிக்கோடு இடப்படுகின்றது.
- ஒன்றைச் சேர்ப்பதைக் குறித்ததற்கும் விரித்துக் கூறுபவற்றைத் தொகுத்துக் கூறுமிடத்தும் சிறுகோடு இடப்படும்

26. **விடை: A**

**விளக்கம்:**

**குடிப் பெருமையின் சிறப்பு**

"தாயானும் தந்தையா லானும் மிகவின்றி
வாயின்மீக் கூறும் அவர்களை ஏத்துதல்,
நோயின்று எனினும், அடுப்பின் கடைமுடங்கும்
நாயைப் புலியாம் எனல்".

**பொருள்:**

குடிப்பெருமை இல்லாதவர் உயர்ந்த பண்பினர் ஆதல் இல்லை. அவருடைய போலித் தோற்றங்கண்டு புகழ்வதெல் லாம், பொய்யான புகழ்ச்சியே அல்லாமல் உண்மைப் புகழ்ச்சி யாகாது. 'அடுப்பின் கடைமுடங்கும் நாயைப் புலியாம் எனல்' என்பது பழமொழி.

27. **விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு

**பொருள்:** கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்.

28. **விடை: A**

**விளக்கம்:**

- அசலம் - அசைவின்மை, அசையாநிலை, அசையாதது, பூமி, மலை.
- ஆசலம் - மக்க சஞ்சலம், குற்றமும் துன்பமும்.
- அசல் - முதல், மூலம், முதற்படி, உயர்ந்தது.
- ஆசல் - மதிப்பு.

29. **விடை: C**

**விளக்கம்:**

- பழகு - பழகிடு (அன்பாய்ப் பழகு), பயிலுதல், உறவு கொள்ளுதல், இணக்கமாதல்.
- பளகு - குற்றம்.
- பலை - பழம், சிற்றாமுட்டிச் செடி
- பழை - கள்

30. **விடை: B**

**விளக்கம்:**

- போ - ஏவல், போவென், பறந்திடு, செல்.
- ம - அசோகமரம்.
- மா - அறிவு, அசைச்சொல், அழகு, அழைத்தல், அளவு, ஆணி.
- மீ - ஆகாயம், உயர்ச்சி, மேலிடம், மகிமை, மேலே, வான் மேன்மை, பெருமை.

31. **விடை: C**

**விளக்கம்:**

- வரை பாய்ந்தான் - ஒரு எல்லை வரை ஓடிப் பாய்ந்தான்.
- வரைப்பாய்ந்தான் - மலையிலிருந்து கீழே குதித்தான். (வரை - மலை)

32. **விடை: D**

**விளக்கம்:**

- கணம் - திரட்சி, வட்டம், கூட்டம், பொருள்
- காணம் - வளைந்தகாயிலுள்ளகொட்பயிறு, பழைய நிறுத்தலளவையுள் ஒன்று, பொன், பொற்காசு, பொருள், பாகம்
- கனம் - பாரம்
- கானம் - பாடல், காடு

33. **விடை: A**

**விளக்கம்:**

- தேவநேயப்பாவாணர் 'தமிழ்ப்பெருங் காவலர்' என அழைக்கப்படுகிறார்
- இவருக்கு 174 சிறப்பு பெயர்கள் உள்ளன

34. **விடை: C**

**விளக்கம்:**

- Sociologism - சமுதாயவியல்
- Sociology - சமூகவியல்

35. **விடை: A**

36. **விடை: C**

**விளக்கம்:**

- எருமை, பசு, மரை - ஆன்
- புல்வாய், நாய், பன்றி - பிணா
- யானை, கவரிமான், ஒட்டகம் - பிடி

37. **விடை: C**

**விளக்கம்:**

- ஜனநாயகம் (சமஸ்கிருதம்) - குடியாட்சி
- ஜனம் (சமஸ்கிருதம்) - மக்கள்
- பூஜ்யம் (சமஸ்கிருதம்) - சுழி
- தாமிரம் (சமஸ்கிருதம்) - செம்பு

38. **விடை: B**

**விளக்கம்:**

- Abdication - ஆட்சித்துறப்பு
- Abduction - வன்முறையில் கடத்துதல்

39. **விடை: D**

**விளக்கம்:**

**அறநெறியாளனுக்கு உபதேசம்:**

தக்கமில் செய்கைப் பொருள்பெற்றால், அப்பொருள்
தொக்க வகையுந் முதலும் அதுவானால்,
'மிக்க வகையால் அறஞ்செய்க!' என வெகுடல்
அக்காரம் பால்செருக்கும் ஆறு.

**பொருள்:** பாலிலே சர்க்கரை சேர்த்ததும் இனிப்புச் சுவை கூடி, அது மேலும் விரும்பப்படுவது போல, அத்தகையோனைத் தரும காரியங்களிலே ஈடுபடத் தூண்டுவதனால், அவன் மேலும் சிறப்பே அடைவான். 'அக்காரம் பால் செருக்கும் ஆறு' என் பது பழமொழி.

40. **விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

**பொருள்:** விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர் பொருள்களை வருந்திக்காத்துப் (பின்பு இழந்து) பற்றுக்கொடு இழந்தோமே என்று இரங்குவர்.

41. **விடை: D**

**விளக்கம்:**

- மண்வெட்டி கொண்டு வா என்னும் சொல் மண்வெட்டியை எடுத்து வா என்னும் பொருளை தருகின்றது.
- மண்வெட்டிக் கொண்டு வா என்னும் சொல் மண்ணை வெட்டி எடுத்து வா என்னும் பொருளை தருகின்றது.

42. **விடை: B**

**விளக்கம்:**

- கலம் - கப்பல்
- காலம் - நேரம்
- கலன் - பாத்திரம், அணிகலன்
- காலன் - எமன்

43. **விடை: B**

44. **விடை: C**

**விளக்கம்:**

நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கயம் | அரசுவா | வேழம் | அல்லியன் |
| களிறு | அனுபமை | பிளிறு | ஆனை |
| களபம் | இபம் | மாதங்கம் | இரதி |
| கைம்மா | குஞ்சரம் | வாரணம் | வல்விலங்கு |
| அஞ்சனாவதி | அத்தி | அஞ்சனம் | அத்தினி |

45. **விடை: D**

**விளக்கம்:**

- கண்ணதாசனின் இயற்பெயர் - முத்தையா
- இவர் தென்றல், முல்லை,கண்ணதாசன் ஆகிய இதழ்களை நடத்தினார்
- இவரின் புனைபெயர்களுள் ஒன்று துப்பாக்கி

46. **விடை: D**

**விளக்கம்:**

- அகடியம் - அநீதி, கபடம் ,பொல்லாங்கு.
- ஆகடியம் - பரிகாசம், பொல்லாங்கு.
- அல் - இருள்
- ஆல் - மரம்

47. **விடை: B**

**விளக்கம்:**

- நு - தியானம், நேசம், உபசர்க்கம், தோனி, நிந்தை, புகழ், ஐயம், நேரம்
- நூ - எல், யானை, ஆபரணம், நூபுரம்

48. **விடை: B**

**விளக்கம்:** கௌதம், கௌதமி, கௌதாரி, கௌரவி, கௌரி, கௌளி

49. **விடை: A**

**விளக்கம்:**

- கூரல் - கூந்தல், இறகு, ஒருபெருமீன் வகை.
- கூறல் - சொல்லல்
- கூரியது - கூர்மையானது (அம்பு கூரியது)
- கூறியது - சொல்லியது (இலக்கணத்தில் கூறியது கூறல் குற்றம்)

50. **விடை: C**

**விளக்கம்:** எள்ளினுள் எண்ணெய் போல - மறைந்திருத்தல்

51. **விடை: B**

**விளக்கம்:** தபால் (உருது) - அஞ்சல் (தமிழ்)

52. **விடை: B**

**விளக்கம்:**

- பூதபத்திரி (சமஸ்கிருதம்) - துளசி
- பூகேசம் (சமஸ்கிருதம்) - ஆலமரம்
- ஜனசங்கியை (சமஸ்கிருதம்) - மக்கள்தொகை
- ஈனம் (சமஸ்கிருதம்) - இழிவு, தாழ்வு

53. **விடை: C**

**விளக்கம்:**

**போலி நண்பர்கள் கேடு செய்வார்கள்:**

பெரியநட் டார்க்கும் பகைவர்க்கும் சென்று
திரிவின்றித் தீர்ந்தார்போல் சொல்லி அவருள்
ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரே
இருதலைக் கொள்ளியென் பார்.

**பொருள்:** இருவரது பகைமையும் வளர, இருவராலும் இவருக்கும் கேடே விளைதலால், ‘இருதலைக் கொள்ளி’ போன்றவராயினர் அவர் என்க. ‘இருதலைக் கொள்ளி என்பார்’ என்பது பழ மொழி. சமாதானம் செய்யமுயல்பவர் இருவருக்கும் பகையாதலும் கூடும் என்பது கருத்து.

54. **விடை: B**

**விளக்கம்:**

- புரட்சிக் கவிஞர் எனவும் பாவேந்தர் எனவும் புகழப்படுபவர் பாரதிதாசன்
- பாண்டியன் பரிசு. அழகின் சிரிப்பு குடும்ப விளக்கு முதலியன இவர்தம் கவிதை நூல்கள்
- இவர் வாழ்ந்த காலம் 29.04.1891 முதல் 21.04 1964 வரை

55. **விடை: A**

**விளக்கம்:**

- இடராழி - துன்பக்கடல்
- துன்பக்கடல் × இன்பக்கடல்

56. **விடை: C**

**விளக்கம்:**

இகர ஈற்று வினையெச்சங்களின் பின் வலி மிகும்.

(எ.கா):

- பாடி + காட்டு - பாடிக்காட்டு
- பேசி + பார் - பேசிப்பார்
- ஓடி + போனாள் - ஓடிப் போனாள்

எழுவாய்த் தொடரில் (முதல் வேற்றுமையில்) வலி மிகாது.

(எ.கா): கிளி + பேசும் - கிளி பேசும்.

57. **விடை: B**

58. **விடை: D**

59. **விடை: B**

**விளக்கம்:**

- ஒரு பெயர்ச்சொல் செய்வினையின் போது இரண்டாம் வேற்றுமை உருபையும் செயப்பாட்டுவினையின் போது மூன்றாம் வேற்றுமை உறுப்பையும் ஏற்கும்.
- ஆனால் இது கட்டாயம் அல்ல. வேற்றுமை உருபு வெளிப்படையாகவும் மறைந்தும் வரும்

60. **விடை: C**

**விளக்கம்:**

- ஜில்லா (சமஸ்கிருதம்) - மாவட்டம்
- ஜனாதிபதி (சமஸ்கிருதம்) - குடியரசுத் தலைவர்
- நேசம் (சமஸ்கிருதம்) - அன்பு

61. **விடை: A**

**விளக்கம்:**

- Dacryocyst - கண்ணீர்ப்பை
- Dacryoma - கண்ணீர்க்கட்டி

62. **விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்

**பொருள்:** தக்க பெரியாரின் கூட்டத்தில் உள்ளனவாய் நடக்கவல்ல ஒருவனுக்கு,அவனுடைய பகைவர் செய்யக்கூடியத் தீங்கு ஒன்றும் இல்லை.

63. **விடை: A**

**விளக்கம்:**

'அது' என்பதற்குச் சிறப்பு விதி:

'அது' என்னுஞ் சுட்டுப் பெயரின் முன் வருமொழியாக வருகிற 'அன்று' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று செய்யுளில் 'ஆன்று' என முதல் நீளும்.

(எ.கா): அது + அன்று - அதான்று

64. **விடை: D**

**விளக்கம்:**

- துளி - உறை, மழை, ஆலி
- தூளி - புழுதி
- குளி - நீராடு
- கூளி - பேய்

65. **விடை: A**

**விளக்கம்:** ஐந்து, ஐப்பசி, ஐம்பது, ஐரோப்பா

66. **விடை: C**

**விளக்கம்:**

- மணிவகை - கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை.

67. **விடை: B**

**விளக்கம்:**

இரு முனைகளிலும் தீப்பற்றிய கொள்ளிக்குள் சிக்கிய எறும்பைப் போல, எந்தப் பக்கமும் தப்ப முடியாத துன்பநிலையை இவ்வுவமை உணர்த்துகிறது.

68. **விடை: D**

**விளக்கம்:**

- ஜோடி (சமஸ்கிருதம்) - இணை
- ஜுரம் (சமஸ்கிருதம்) - காய்ச்சல்
- சுத்தம் (சமஸ்கிருதம்) - தூய்மை, துப்புரவு
- ஜேப்பி (உருது) - சட்டைப்பை

69. **விடை: A**

**விளக்கம்:**

- வண்டி ஓடாது - ஒன்றன்பாலில் எதிர்மறை
- செய்திகள் வாரா - பலவின் பாலில் எதிர்மறை
- மாதவி பாடினாள் - எழுவாய் தொடர்

70. **விடை: A**

**விளக்கம்:**

- யானைப் படையும் குதிரைப் படையும் சென்றன.
- தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர்.

71. **விடை: A**

**விளக்கம்:**

**எடுத்துக்காட்டு உவமையணி**

எடுத்துக்காட்டு உவமையணி என்பது உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து உவம உருபு மறைந்து வருவது.

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு

**பொருள்:** உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும் யானைத் தன் பெருமையை நிலைநிறுத்தும், அதுபோல் ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளர மாட்டார்.

72. **விடை: C**

**விளக்கம்:**

- வேலம் - வேலமரம், தோட்டம்.
- வேழம் - கரும்பு, நாணல், இசை, யானை.
- வேளம் - வாழிடம்
- விழம்பு - சோறு
- விளம்பு - சொல்

73. **விடை: A**

**விளக்கம்:**

- ‘திராவிடம்’ என்ற சொல்லை முதன்முதலாகக் குறிப்பிட்டவர் குமரிலபட்டர்
- ‘திராவிட’ என்னும் சொல்லே ‘தமிழ்’ என்னும் சொல்லிலிருந்து உருவானதாகும் என்று கூறியவர் - ஈராஸ் பாதிரியார்

74. **விடை: A**

**விளக்கம்:**

- கவணம் - காயக்கட்டு, கட்டுமருந்து
- கவனம் - அக்கறை, நினைவோட்டம்,காடு
- காணம் - வளைந்தகாயிலுள்ளகொட்பயிறு, பழைய நிறுத்தலளவையுள் ஒன்று, பொன், பொற்காசு, பாகம்.
- கானம் - தேர், காடு, நந்தவனம், மணம், தொகுதி, பேதை.

75. **விடை: B**

**விளக்கம்:**

**உயிர்முன் உயிர் ணர்தல்**

வருமொழி முதலில் உயிர்வந்தால், இகர ஈகார ஐகாரங் களின் பின்னே யகர மெய்யும், அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் இவ்வேழு உயிர்களின் பின்னே வகரமெய்யும், ஏகாரத்தின் பின்னே யகரமெய்யும், வகரமெய்யும் உடம்படுமெய்யாக வரும்.

(எ.கா): பலா + இலை - பலாவிலை

76. **விடை: D**

77. **விடை: B**

**விளக்கம்:**

- கன்று, குட்டி குடாவடி - கரடி
- குருளை, குட்டி, பிள்ளை, போதகம்.பறழ். புலி

78. **விடை: D**

**விளக்கம்:**

பிறை அடைப்புக்குள் மேலும் பிறைஅடைப்பு தேவைப்பட்டால், பகர அடைப்பு இடவேண்டா; பிறை அடைப்பையே பயன்படுத்தலாம்.

79. **விடை: A**

**விளக்கம்:**

- தொளி - சேறு
- தோளி - அரக்கு,நன்னீர் மீன்வகை, நீலச்செடி
- தொலி - உமி, தோல்
- தோலி - ஒரு பிசின், மீன்வகை

80. **விடை: D**

**விளக்கம்:**

சுட்டு எழுத்களைப் பயன்படுத்தாமலே ஒரு பொருளைச் சுட்டுவது சுட்டு அல்லாச் சுட்டு ஆகும்.

(எ.கா): இராமன் வந்தான் அவன் வில்லை வளைத்துச் சீதாவை மணந்தான் - அவன் என்பது இராமனைச் சுட்டிய சுட்டு.

இராமன் வந்தான். தசரத மைந்தன் வில்லை வளைத்து சீதையை மணந்தான் -தசரத மைந்தன் என்பதும் இராமனைச் சுட்டுகிறது. இது சுட்டு அல்லாச் சுட்டு.

81. **விடை: C**

**விளக்கம்:**

ஆப்பு அடிக்கப்பட்ட மரம் அசையாமல் உறுதியாக நிற்பதைப் போல, மனஉறுதி அல்லது நிலைத்த தன்மையுடன் இருப்பதை இவ்வுவமை உணர்த்துகிறது.

82. **விடை: D**

**விளக்கம்:**

- தாமிரபரணி (சமஸ்கிருதம்) - பொருநையாறு
- சூரியன் (சமஸ்கிருதம்) - கதிரவன், ஞாயிறு, பரிதி
- ஞாபகம் (சமஸ்கிருதம்) - நினைவு, நினைப்பு

83. **விடை: C**

**விளக்கம்:** கழுதை சாணம் - கழுதை விட்டை

84. **விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

**பொருள்:** மகிழும் படியாகக் கூடிபழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

85. **விடை: B**

**விளக்கம்:**

கண்க்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.

86. **விடை: D**

**விளக்கம்:** சௌக்கியம், சௌகரியம், சௌந்தர்யம், சௌரவம்

87. **விடை: C**

**விளக்கம்:**

“உனக்குப் பாவு ஓடணுமா, வேண்டாமா?” என்றான் ரகு

88. **விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

**பொருள்:** வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது

89. **விடை: B**

90. **விடை: D**

**விளக்கம்:**

“ஒவ்வொரு” எனும் தொடர் “ஒருமையையும்”, “ஒவ்வொருவர்” எனும் தொடர் “பன்மையையும்” வினைமுற்றாகக் கொள்ளும்.

(எ.கா):

- ஒவ்வொரு நிகழ்ச்சியும் சிறப்பாக அமைந்தது.
- ஒவ்வொன்றும் நாள்தோறும் வெடிக்கிறது.
- ஒவ்வொருவரும் குறள் படிக்கின்றனர்.
- ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு உண்மையை விளக்குகின்றது.

91. **விடை: B**

**விளக்கம்:**

- அது நகரத்திற்குச் செல்லும் சாலை.
- ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகசைப்பு, உலகில் எங்கோ ஓர் எதிர்விளைவை ஏற்படுத்தும் என்று அறிவியல் கூறுகிறது
- அஃது ஓர் இனிய பாடல்

92. **விடை: C**

**விளக்கம்:**

- அந்தோ, நாய் வண்டியில் அடிபட்டுவிட்டதே! - உணர்ச்சித் தொடர்
- மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள் - தனிநிலைத் தொடர்
- நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை. - கலவைத் தொடர்

93. **விடை: A**

**விளக்கம்:**

- Comparativism - ஒப்பியல்
- Existentialism - இருத்தலியம்

94. **விடை: A**

**விளக்கம்:**

**பேதை எதையும் செய்ய மாட்டான்**

உறுகண் பலவும் உணராமை கந்தாத்,
தறுகண்மை ஆகாதாம் பேதை,--'தறுகண்
பொறிப்பட்ட வாறல்லால், பூணாது'என் றெண்ணி,
அறிவச்சம் ஆற்றப் பெரிது.

**பொருள்:**

'ஊழையும் உப்பக்கங் காண்பர் தாழாது உஞற்றுபவர்' ஆனால் பேதையோ அனைத்தையும் ஊழின் பயன் என்று கருதி அஞ்சி, முயற்சியின்றித் துன்பங்களில் உழன்று அழிவான். 'அறிவச்சம் ஆற்றப் பெரிது' என்பது பழமொழி.

95. **விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

**பொருள்:**

அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நின்று உலகத்தைக் காப்பது அரசனுடைய செங்கோலாகும்.

96. **விடை: C**

97. **விடை: B**

98. **விடை: C**

99. **விடை: A**

100. **விடை: A**

101. **விடை: D**

**விளக்கம்:**

- அல் - இரவு
- அல் × பகல்

102. **விடை: B**

**விளக்கம்:** ஞாயிறு, ஞாலம், ஞாழல், ஞாளி, ஞானம்

103. **விடை: C**

**விளக்கம்:**

- கலியர் - படைவீரர்(கள்), வறியவர்கள்.
- கழியர் - உப்பளவர், நெய்தல்நிலமக்கள்
- களியர் - வெறியர், நெய்தல்நிலமக்கள்
- கரம் - ஒளிக்கதிர், கை, நஞ்சு, கழுதை
- கறம் - கொடுமை, வன்செயல்

104. **விடை: D**

105. **விடை: B**

**விளக்கம்:**

- ஜனனி (சமஸ்கிருதம்) - தாய்
- விவேகம் (சமஸ்கிருதம்) - பகுத்தறிவு
- வதனம் (சமஸ்கிருதம்) - முகம்
- திராணி (சமஸ்கிருதம்) - தகுதி, வலிமை

106. **விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

**பொருள்:**

அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்: அன்பு உடையவர் தம் உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்

107. **விடை: D**

**விளக்கம்:**

ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.

108. **விடை: D**

**விளக்கம்:**

- செயப்படுபொருள் குன்றாவினைகளே செயப்பாட்டு வினைகள் அமையும்.
- ‘படு’ ‘உண், பெறு’ முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன.
- அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து ஆயிற்று, போயிற்று, போனது' முதலான துணை வினைகள் செயப்பாட்டுவினைகளை உருவாக்குகின்றன.

109. **விடை: C**

**விளக்கம்:**

- Syllable - அசை
- Symbol - குறியீடு

110. **விடை: B**

111. **விடை: D**

**விளக்கம்:**

- சிரை - நரம்பு, குரங்கு.
- சிறை - காவல் (சிறைச்சாலை), தடைசெய்தல், அடிமை, மதில், கோட்டை, அரண்
- சிரு - தோள் பொருத்து, போதல்
- சிறு - மெலி (சிறுத்துப் போனது), முட்டுக் கட்டையிடுதல், தடுத்தல், குறைந்த

112. **விடை: D**

**விளக்கம்:**

அடகு - அடை

113. **விடை: B**

114. **விடை: D**

**விளக்கம்:**

- மடிவு - சோம்பல்
- மடிவு × சுறுசுறுப்பு

115. **விடை: B**

**விளக்கம்:**

- அழுக்காறுடையவன் என்றால் பொறாமையுடையவனைக் குறிக்கும்.
- பொறாமை உடையவன் × பொறாமையற்றவன்
- தூய்மை உடையவன் × தூய்மை அற்றவன்

116. **விடை: D**

**விளக்கம்:**

- குலை வகை - கொத்து, குலை, தாறு, கதிர், அலகு அல்லது குரல், சீப்பு.
- பழத்தோல் வகை - தொலி, தோல், தோடு, ஓடு, குடுக்கை, மட்டை, உமி, கொம்மை.

117. **விடை: C**

**விளக்கம்:**

**வினையாலணையும் பெயர்**

- ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும்.
- அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும், மூன்று காலங்களிலும் வரும்.

**அதிகாரம்:** விருந்தோம்பல்

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

**பொருள்:**

நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள்.

Since 2011

118. **விடை: B**

119. **விடை: C**

**விளக்கம்:**

- மக்கள் இல்லை
- வருவதும் போவதும் கிடையா
- ஏற்கத்தக்கது அன்று

120. **விடை: C**

**விளக்கம்:**

- Write inhibit notch - எழுது விடாப் பொழிவு
- Workspace - பணியிடப்பரப்பு / பணியகம்
- Write protect notch - எழுதுத் தடுப்பு பொழிவு

121. **விடை: C**

**விளக்கம்:**

- உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன
- பாரதியார், “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.
- “என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்!” என்று பாரதத்தாயின் தொன்மையைப் பற்றிப் பாரதியார் குறிப்பிடுகிறார்.

122. **விடை: D**

**விளக்கம்:**

- ஈந்தாள் - கொடுத்தாள்
- ஈன்றாள் - பெற்றெடுத்தாள்

123. **விடை: C**

**விளக்கம்:**

அம்பு - அத்திரம், கணை, சரம், பகழி, பாணம், வாளி.

124. **விடை: D**

**விளக்கம்:**

அழுக்காறு - அழுங்கு

125. **விடை: D**

**விளக்கம்:**

“மூடன்” (உயர்திணை) + “மாடு” (அஃறிணை) சேர்ந்து வந்தால்,
பயனிலை பொதுவாக அஃறிணைப் பன்மையில் வரும்

126. **விடை: B**

**விளக்கம்:**

அஃறிணைப் பன்மைக்கு அல்லவும் ஒருமைக்கு இல்லையும் பயன்படும்

- அவை காகங்கள் அல்ல
- அது காகம் இல்லை

127. **விடை: D**

**விளக்கம்:**

- மதுரையில் 05.01.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது.
- மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தார்.

128. **விடை: B**

**விளக்கம்:**

நாளை பள்ளிக்கு விடுமுறை - செய்தித்தொடர்

129. **விடை: B**

**விளக்கம்:**

- குறிஞ்சி மக்கள் - வெற்பன், குறவர், குறத்தியர்.
- முல்லை மக்கள் - தோன்றல், ஆயர், ஆய்ச்சியர்.

130. **விடை: B**

**விளக்கம்:**

- நாலிகை - தொளை, அடுப்புச்சந்து, மூங்கில்.
- நாழிகை - நேரம் (நாழிகை யாகிவிட்டது), அறுபது வினாடி கொண்ட கால அளவு, தெய்வப்படிமை இருக்கும் சிற்றறை அல்லது திருவுண்ணாழிகை.
- அலத்தி - மின்மினி, நுளம்பு.
- அளத்தி - நெய்தல் நிலத்துப்பெண், உப்பு விளைவிப்போன் பெண்.

131. **விடை: D**

**விளக்கம்:**

- ஒருபொருட் பன்மொழி : வெங்கொடும் போர் - வெம்மை, கொடும் என்பதன் பொருள் கொடுமை.
- வட்டநிலா, செந்தாமரை ஆகியவை பண்புதொகைகள்.
- மேடு பள்ளம் உம்மைத்தொகை ஆகும்.

132. **விடை: A**

**விளக்கம்:**

கின்னம் - கிளை, துன்பம்

133. **விடை: C**

134. **விடை: D**

**விளக்கம்:**

இணரூழ்த்தும் நாறா மலரனையர் - கற்றதை விரித்துரைக்க இயலாதவர்

அதாவது, மணமில்லாத மலர்கள் கொத்தாக மலர்ந்தாலும் பயனில்லாதது போல, கற்ற அறிவை பிறருக்கு விளக்க முடியாதவர்களைக் குறிக்கிறது.

135. **விடை: A**

**விளக்கம்:**

- போனகம் (சமஸ்கிருதம்) - சோறு
- ஜீர்ணம் (சமஸ்கிருதம்) - செரிமானம்
- பூலோகம் (சமஸ்கிருதம்) - நிலவுலகம்
- பூகம்பம் (சமஸ்கிருதம்) - நிலநடுக்கம்

136. **விடை: C**

137. **விடை: D**

**விளக்கம்:**

இம் மூன்று தொடர்களிலும் செயப்படுப்பொருளையே முதன்மைப்படுத்துகின்றன

138. **விடை: C**

**விளக்கம்:**

மருட்கை - மருள்

139. **விடை: C**

140. **விடை: B**

**விளக்கம்:**

- புதுக்கோட்டை - புதுகை
- பதுச்சேரி - புதுவை
- மன்னார்குடி - மன்னை
- மயிலாப்பூர் - மயிலை

141. **விடை: A**

**விளக்கம்:**

இறைவன் கடம்பவனத்தை விட்டு நீங்கினான் என்ற தொடரில்,

- இறைவன் → எழுவாய்
- நீங்கினான் → வினை

இங்கு "நீங்குதல்" என்ற செயலை இறைவன் தானே செய்கிறான்.

அதாவது, செயல் எழுவாயிடமே முடிகிறது;

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

142. **விடை: B**

**விளக்கம்:**

மண்ணுக்குள் நீர் மறைந்து இருப்பதைப் போல, சிலரிடத்தில் திறமைகள் வெளியில் தெரியாமல் உள்ளார்ந்த நிலையில் இருக்கும். அதனால் இவ்வுவமை, மனிதர்களுக்குள் மறைந்திருக்கும் திறமை என்பதைக் குறிக்கிறது.

143. **விடை: D**

144. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கண்ணோட்டம்

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு.

**பொருள்:** தம் தம் கடமையாகிய தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையவராக இருக்க வல்லவர்க்கு இவ்வுலகம் உரிமை உடையது

145. **விடை: D**

146. **விடை: D**

147. **விடை: B**

**விளக்கம்:**

- சிறிய பையன், புதிய பாடம், அழகிய கவிதை ஆகியவை குறிப்புப் பெயரெச்சங்கள்
- எழுதிய கடிதம் என்பது தெரிநிலைப் பெயரெச்சம்
- செயலையோ, காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.
- செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

148. **விடை: B**

**விளக்கம்:**

துப்பு - வலிமை, பவளம், காறியுமிழ்

149. **விடை: C**

**விளக்கம்:**

- திருஆவிநன்குடி - பழனி
- திருச்செந்தில் - திருச்செந்தூர் / செந்தில்

150. **விடை: C**

**விளக்கம்:**

உண்மைக்கு அழிவில்லை அல்லவா? - வினா வாக்கியம்

151. **விடை: D**

**விளக்கம்:**

- Headlines - தலைப்புச் செய்தி
- Hot News - அண்மைச்செய்தி
- Fake News - பொய்யான செய்தி
- Filler - துண்டுச் செய்திகள்

152. **விடை: C**

**விளக்கம்:**

**வஞ்சிக்கவும் செய்யலாம்**

செறிவுடைத் தார்வேந்தன் செவ்வியல பெற்றால்
அறிவுடையார் அவ்வியமும் செய்வர்—வறிதுரைத்துப்
பிள்ளை களைமருட்டும் தாய்போல் அம்புலிமேல்
ஒள்ளியகாட் டாளர்க்கு அரிது.

**பொருள்:**

ஆட்சியிலுள்ளார் தவறான செயல்களில் ஈடுபட்டால், அறிவுடையார் பொய்யுரைத்து மருட்டியாயினும், அவரைத் திருந்தும்படி செய்தல் வேண்டுமென்பது கருத்து. 'ஒள்ளிய காட் டாளர்க்கு அரிது' என்பது பழமொழி.

153. **விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடாவொழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்

**பொருள்:**

வஞ்சமனம் உடையவனது பொய்யொழுக்கத்தை அவனுடைய உடம்பில் கலந்து நிற்க்கும் ஐந்து பூதங்களும் கண்டு தம்முள் சிரிக்கும்

154. **விடை: B**

**விளக்கம்:**

- வேய் - வேய்ந்தவன்
- வேய்ந்தார் - வினைமுற்று

155. **விடை: C**

156. **விடை: C**

**விளக்கம்:**

- வாய்தா (சமஸ்கிருதம்) - காலக்கெடு, தவணை
- வானரம் (சமஸ்கிருதம்) - குரங்கு
- வாபஸ் (சமஸ்கிருதம்) - மீட்டல், மீட்பு
- வாரிதி (சமஸ்கிருதம்) - கடல்

157. **விடை: C**

**விளக்கம்:**

- வாசி - குதிரை, படி
- கவி - பா, குரங்கு
- இளை - பூமி, மெலி

158. **விடை: D**

**விளக்கம்:**

புலி கொன்ற யானை

- புலியைக் கொன்ற யானை - செய்வினை.
- புலியால் கொல்லப்பட்ட யானை - செயப்பாட்டு வினை.

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

159. **விடை: C**

**விளக்கம்:**

- மூச்சுப் பிடித்தல் - தீவிரமாக முயலுதல்
- மூரல் முறுவல் - புன்சிரிப்பு
- மூச்சுப்பேச்சு - உயிர் வாழப்போராடுதல்

160. **விடை: A**

**விளக்கம்:**

- Tempest - பெருங்காற்று
- Whirlwind - சுழல்காற்று

161. **விடை: B**

162. **விடை: C**

163. **விடை: C**

164. **விடை: A**

165. **விடை: B**

166. **விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா

உட்கோட்டம் இன்மை பெறின்.

**பொருள்:**

உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுவுநிலைமையாம்.

167. **விடை: C**

**விளக்கம்:**

- தெலுங்கு என்பது நடுத்திராவிட மொழி
- தமிழ், கன்னடம், மலையாளம் ஆகியவை தென்திராவிட மொழிகள்

168. **விடை: C**

**விளக்கம்:**

- அஜித்தும் கலையரசியும் பேருந்தில் அமர்ந்து சென்றனர். (வினையெச்சம்)
- பேருந்தில் அமர்ந்த பயணிகளுக்கு நடத்துநர் பயணச்சீட்டு கொடுத்தார். (பெயரெச்சம்)
- பயணக் களைப்பின் காரணமாக வகுப்பறை சென்றதும் ஆசிரியர் நாற்காலியில் அமர்ந்தார். (வினைமுற்று)

169. **விடை: C**

**விளக்கம்:**

- காண் - கண்ட
- கண்டு - வினையெச்சம்

170. **விடை: D**

**விளக்கம்:**

“வண்மை” என்ற சொல்லுக்கு பொருள், வளம், கொடைத்தன்மை, செல்வம், ஈகை போன்றவையாகும். இது பொதுவாக ஒருவரிடம் இருக்கும் வளத்தையும், அதை பிறருக்கு கொடுக்கும் மனப்பான்மையையும் குறிக்கும்

**அதிகாரம்:** பொறையுடைமை

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

**பொருள்:**

வறுமையுள் வறுமை, விருந்தினரைப் போற்றாமல் நீக்குதல்; வல்லமையுள் வல்லமை என்பது அறிவிலார் தீங்கு செய்தலைப் பொறுத்தலாகும்.

171. **விடை: B**

**விளக்கம்:**

- வாசனை (சமஸ்கிருதம்) - மணம், நறுமணம்
- வாசகம் (சமஸ்கிருதம்) - செய்தி, சொற்றொடர்
- வாத்தியார் (சமஸ்கிருதம்) - கல்வி கற்பிப்போன்
- வாகடர் (சமஸ்கிருதம்) - மருத்துவர்

172. **விடை: C**

**விளக்கம்:**

- வாஞ்சை (சமஸ்கிருதம்) - விருப்பம்
- வாக்குரிமை (சமஸ்கிருதம்) - தெரிந்தெடுப்புரிமை
- வாக்கியம் (சமஸ்கிருதம்) - சொற்றொடரியம்
- வஸ்திரம் (சமஸ்கிருதம்) - ஆடை, கழிவு
- வரபிரசாதம் (சமஸ்கிருதம்) - அருள்கொடை

173. **விடை: B**

**விளக்கம்:**

- வயிற்றெரிச்சல் - பொறாமை
- வரன்முறை - அடிப்பட வந்தமுறை வரலாறு

174. **விடை: B**

**விளக்கம்:**

- Parole - புறமொழி
- Paradox - முரண்பாடு
- Instinct - இயற்கை அறிவு
- Blogspot - வலைப்பூ

175. **விடை: C**

176. **விடை: D**

**விளக்கம்:**

- திருவேங்கடம் என்ற இயற்பெயரைக் கொண்டவர் - மு. வரதராசனார்
- சி. இலக்குவனாரின் இயற்பெயர் - இலட்சுமணன்

177. **விடை: C**

**விளக்கம்:** ராஜினாமா (உருது) - பதவி விலகலாவணம்

178. **விடை: B**

**விளக்கம்:**

- ராஜாங்கம் (சமஸ்கிருதம்) - அரசு
- ராஜ்பவன் (சமஸ்கிருதம்) - அரசகம்
- ராத்திரி (சமஸ்கிருதம்) - இரவு, இரா, அல்
- ராணுவம் (சமஸ்கிருதம்) - போர்ப்படை, படைத்துறை
- ராகி (சமஸ்கிருதம்) - கேழ்வரகு

179. **விடை: B**

**விளக்கம்:**

- உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - அரசு, கயிறு, வரலாறு, ஒன்பது. விறகு
- வன்தொடர்க் குற்றியலுகரம் - பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று, எட்டு, உழக்கு.

180. **விடை: B**

**விளக்கம்:**

நீரோடையும் தாமரை மலர்களும் “எங்களைக் கவி ஓவியமாகத் தீட்டுக” என்றன

181. **விடை: C**

**விளக்கம்:**

தெறிக்கப் பேசுதல் - நிதான மின்றிக் கடுத்துப்பேசுதல்

182. **விடை: A**

**விளக்கம்:**

- Internet Service Provider - இணைப்பு வழங்கு நிறுவனம்
- Hypertext Mark-up Language - மீஉரைக் குறிப்பு மொழி
- Hypertext Transfer Protocol - மீஉரைப் பரிமாற்ற நெறிமுறை

183. **விடை: D**

**விளக்கம்:**

- தமிழ்ச் செய்யுள் கலம்பகம் என்ற நூலைத் தொகுத்தவர் ஜி.யு .போப்
- வீரமாமுனிவர் தமிழின் முதல் அகராதியான சதுரகராதி என்னும் நூலை இயற்றி உள்ளார்.

184. **விடை: C**

**விளக்கம்:**

- வணங்கி - வினையெச்சம்
- வணங்கிய - பெயரெச்சம்
- வணங்கியவன் - வினையாலணையும் பெயர்

185. **விடை: D**

**விளக்கம்:**

- ஐம்பெருங்குழு: அமைச்சர், சடங்கு செய்விப்போர், படைத்தலைவர், தூதர், சாரணர் (ஒற்றர்).
- எண்பேராயம் குழு: கரணத்தியயவர், கரும் விதிகள், கணகச்சுற்றம், கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளிமறவர்.

186. **விடை: B**

**விளக்கம்:** செழியன் இன்று புதிய நூல் ஒன்று வாங்கினான்

187. **விடை: D**

**விளக்கம்:**

- போத்து - மரை, பசு, புலி, பூனை
- களிறு - யானை, சுறவு, பன்றி
- பகடு - எருமை, யானை, பெற்றம்

188. **விடை: D**

**விளக்கம்:**

- Narrowcasting - குறிவைப்பொளிபரப்பு
- Broadcasting - அகன்ற ஒளிப்பரப்பு

189. **விடை: C**

**விளக்கம்:**

- ஊன்றுகோல் என்பது கவிஞர் முடியரசன் இயற்றிய நூல்.
- இளைஞர் இலக்கியம், படித்த பெண்கள், இசையமுது ஆகியவை பாரதிதாசன் இயற்றிய நூல்

190. **விடை: C**

**விளக்கம்:**

- அடவி - அடர்
- அணு - அள்
- அலவன் - அலவு

191. **விடை: D**

**விளக்கம்:**

- நீர்க்குள் பாசி போல- மூர்க்கர்களுடைய நட்பு/ நிலையற்ற தன்மை
- நீர்மேல் எழுத்து போல - நிலையற்ற தன்மை
- புனையா ஓவியம் போல – சோகம்

192. **விடை: D**

193. **விடை: C**

194. **விடை: A**

**விளக்கம்:** அக்காரடலை - அடு

195. **விடை: B**

196. **விடை: D**

**விளக்கம்:**

- ஜி.யு. போப் பிறந்த ஆண்டு - 1820
- ஜி.யு. போப் தன்னுடைய 19வது வயதில் (1839) தமிழகம் வந்தார்
- ஜி.யு. போப் விருது தமிழக அரசினால் 2014-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது

197. **விடை: B**

**விளக்கம்:**

- பாடியவன், அகழ்பவர், வந்தவன் ஆகியவை வினையாலணையும் பெயர்கள்.
- சென்றான் என்பது வினைமுற்று

198. **விடை: B**

**விளக்கம்:**

- கோழி - கொக்கரிக்கும்
- சேவல் - கூவும்

199. **விடை: B**

200. **விடை: D**